L.B.

தச்சாம்பாடி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: திரு. சசிகலா சரவணன் - தலைவர்

ந.க.எண். /2024 நாள்: 6.3.2024

பொருள்: புதிய மனைப்பிரிவு வரைபடம் அங்கீகாரம் - திருவண்ணாமலை மாவட்டம் சேத்துப்பட்டு ஒன்றியம் தச்சாம்பாடி ஊராட்சி - சர்வே எண்கள்: 484/1A ல் ஏக்கர் 0.83 செண்டு பரப்பில் - புதிய குடியிருப்பு மனைகள் அமைத்திட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களிடமிருந்து தொழில்நுட்ப இசைவு வரப்பெற்றது, வரைபட அங்கீகாரம் வழங்குதல் - சார்பு

பார்வை: 1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருவண்ணாமலை அவர்களின் தொழில்நுட்ப இசைவு கடித எண். ம.வ.ந.ஊ.து.இ (தி.ம) ந.க.எண். 54/2024 தி.மலை, நாள்:23.02.2024

2. தச்சாம்பாடி ஊராட்சி மன்ற தீர்மான எண். 233 /2024 நாள் :6.3.2024

3. ம.வ./3 ஊ.உ.கி.(தி.மலை) எண். 54/2024.

ஆணை:

சேத்துப்பட்டு ஒன்றியம், தச்சாம்பாடி ஊராட்சி சர்வே எண்: 484/1A ல் ஏக்கர் 0.83 செண்டு பரப்பில் உத்தேச குடியிருப்பு மனை பிரிவிற்கு நகர் ஊரமைப்பு துறை இயக்குநர் அவர்களிடமிருந்து தொழில்நுட்ப இசைவு வரப்பெற்றதைத் தொடர்ந்து மனைப்பிரிவு நிபந்தனைகள் 19இ, நில உச்ச வரம்பு சட்டம் மற்றும் நில சீர்திருத்தச் சட்டம் 1961 தொடர்பான விதிமுறைகளை நிறைவு செய்து 19(உ)-ன்படி என்றும் எந்த துறைக்காகவும், நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜித பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உறுதி செய்து கொண்டு அரசாணை எண். 79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள்: 04.05.2017ன் படி 3% உள்ளாட்சி அமைப்பு நிலப்பயன் மாற்ற கட்டணம் ரூ.5100/-(எழுத்தால் ரூபாய். ஐந்தாயிரத்து ஒரு நூறு மட்டும்) கருவூல சீட்டு எண்.20240223012710 நாள்:23.02.2024-ன்படி அரசு தலைப்பில் செலுத்தப்பட்டு உள்ளதையடுத்து மேற்படி மனை பிரிவினை அனுமதித்து கீழ்குறிப்பிட்ட மனை எண்கள் அடங்கிய வரைபட அங்கீகாரம் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

தொழில்நுட்ப இசைவு எண்	:	ம.வ.ந.ஊ.து.இ (தி.ம) எண். 54/2024
மனைப்பிரிவின் பரப்பு	:	0.83 ஏக்கர்
கோரிய மனைகள்	:	21
ஒதுக்கிய மனைகள்	:	20
விற்பனைக்குரியவை	:	20

S. Sasi

PRESIDENT
THACHAMBADY PANCHAYAT
CHETPET UNION, T.V.MALAI Dt.

தலைவர்
தச்சாம்பாடி ஊராட்சி
சேத்துப்பட்டு ஒன்றியம்

பெறுநர்:

திரு. G. ராஜேந்திரன் அவர்கள்,
நெ.346, கொட்டா தெரு,
மன்சுராபாத் கிராமம். தி.மலை மாவட்டம்.

பொருள் எண்.238 /2024 நாள்: 6.3.2024

சேத்துப்பட்டு ஒன்றியம் தச்சாம்பாடி ஊராட்சிக்கு உட்பட்ட அயன் புஞ்சை சர்வே எண்: 484/1A ல் ஏக்கர் 0.83 செண்டு பரப்பில் மனைப்பிரிவுகள் ஏற்படுத்தி 20 மனைகள் அமைக்க நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் தொழில்நுட்ப இசைவு எண்.54/2024-ன்படி மேற்படி இடத்தின் உரிமையாளர்கள் திரு.G.ராஜேந்திரன் என்பவர் சேத்துப்பட்டு ஒன்றியம் தச்சாம்பாடி ஊராட்சிக்கு உட்பட்ட அயன் புஞ்சை சர்வே எண்: 484/1A ல் ஏக்கர் 0.83 செண்டு பரப்பில் 30 அடி பொதுரோடு, மின் மாற்றி அமைக்கவும், பொது உபயோக இடமும் தச்சாம்பாடி ஊராட்சிக்கு ஆவண எண்.601/2024 மூலம் தானசெட்டில்மெண்டு பத்திரப்பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆகவே மேற்படி மனைகளை விற்பதற்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என ஊராட்சி மன்றத்தின் சார்பாக அங்கீகாரம் வழங்கப்படுகிறது.

உண்மை நகல்

PRESIDENT
THACHAMBADY PANCHAYAT
CHEYYAR

தலைவர்
தச்சாம்பாடி ஊராட்சி
சேத்துப்பட்டு ஒன்றியம்

பெறுநர்:

திரு. சார்பதிவாளர் அவர்கள்,
சேத்துப்பட்டு சார்பதிவாளர் அலுவலகம்,
சேத்துப்பட்டு. தி.மலை மாவட்டம்.